# மசாடா:
# எபிரேய வரலாற்றின் ஒரு திருப்பு முனை



யோ. கி. போல் றொகான்

## மசாடா: எபிரேய வரலாற்றின் ஒரு திருப்பு முனை

ஆசிரியர்: பேராசிரியர் – அருட்திரு யோ.கி. போல் றொகான்
மொழி: தமிழ்
விடயம்: விவிலிய வரலாறு, இறையியல்
முதற் பதிப்பு: மார்கழி, 2022
பக்கங்கள்: x + 138
வெளியீடு: நல்லாயன் நிலையம்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கத்தோலிக்க
ஆன்மிகப் பணியகம்), திருநெல்வேலி
உரிமை: வெளியீட்டாருக்கு
அச்சகம்: ஜே. எஸ். அச்சகம், பண்டத்தரிப்பு
விலை: ரூபா 650/-
ISBN: 978-624-96945-5-2

## Masada: A Turning Point in the Hebrew History

Author: Prof. Rev. J.C. Paul Rohan
Language: Tamil
Subject: Biblical History, Theology
First Publication: December, 2022
Pages: x + 138
Publisher: Good Shepherd Centre
(Catholic Chaplaincy of the University of Jaffna),
Thirunelvely
Copy Right: To the Publisher
Printer: J.S. Printers, Pandatharippu
Price: Rs. 650/-
ISBN: 978-624-96945-5-2

# முன்னுரை

இஸ்ரயேல் நாட்டின் தென்பகுதியில் மிகப் பழைமையானதும், பாரம்பரியமானதுமான ஒரு கற்கோட்டை உள்ளது. மிக உயர்ந்த, செங்குத்தான அமைப்பைக்கொண்ட இக்கற்கோட்டை அமைந்துள்ள பிரதேசம் மசாடா என்று அழைக்கப்படுகிறது. இஸ்ரயேலின் வரலாற்றில் தனித்துவமானது ஆகக் கருதப்படும் இக்கற்கோட்டையின் அமைவிடம் கருதி 'மசாடாக் கற்கோட்டை' என்ற பெயரை அது பெற்றுள்ளது. இஸ்ரயேலின் யூதேயப் பாலைவனத்தில் உள்ள சாக்கடற் பகுதியில் இருந்து கிழக்குத் திசையில் 42 கிலோ மீட்டர் தொலைவில் இக்கற்கோட்டை உள்ளது. தற்போது இஸ்ரயேலின் தேசியப் பூங்காவாகவும், ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ பிரகடனப்படுத்தியுள்ள உலகப் பாரம்பரியத் தளமாகவும் இக்கற்கோட்டை விளங்குகின்றது. ஆயினும் அது ஒரு சுற்றுலா மையமான உல்லாசப் போக்கிடம் அல்ல. ஒரு வரலாற்றுக் காலத்துக்குரிய இஸ்ரயேல் மக்கள் தமது தேசியத்தைக் காப்பாற்றப் புரிந்த தியாகங்களைத் தன்னகத்தே சுமந்து நிற்கும் ஓர் உணர்வுக் காப்பகம் ஆகும். உலகிற்கு அவசியமான பல வரலாற்றுச் சான்றுகளையும், உரோமைய சாம்ராஜ்யம் தனது உச்சக்கட்ட மேட்டிமையுடன் உலக வல்லரசாகக் கொடிகட்டிப் பறந்த காலகட்டத்தில் அதற்கெதிரான எபிரேய மக்களின் உணர்வு பூர்வமான போராட்ட முனைப்புகளையும் மௌனமாக உட்சுமந்து, ஆனால் உரத்துச் சொல்லிக்கொண்டிருக்கும் ஓர் ஆவணக் கோட்டையாகும்.

உரோமைய நாகரிகம் அக்கால உலகு முழுவதையும் வியாபித்து ஏனைய இனங்களையும், கலாசாரங்களையும் விழுங்க முனைப்பெடுத்துக் கொண்டிருந்த ஒரு வரலாற்றுச் சூழமைவில் அப்பெரும் சாம்ராஜ்யத்துக்கெதிராக மிகச்சிறிய அளவிலான எபிரேயப் போராளிகள் உட்பட்ட மக்கள் குழுவால் நிகழ்த்தப்பட்ட போரின் இறுதிக்களமாக அமைந்தது இக் கற்கோட்டை. ஒரே கடவுக்கோட்பாட்டை தம் இறுதிமூச்சுவரை கைக்கொண்டு, சிலைகளையும், தேவர்களையும், தேவதைகளை யும் வழிபட்ட உரோமையரின் கைகளில் சிறைப்படாமல் இறுதிவரை போரிட்டுத் தற்கொடையாகித் தம்மைத்தாமே அழித்துக்கொண்ட எபிரேயப் போராளிகள் உட்பட்ட மக்கள் குழு ஒன்றின் வீரவரலாற்றின் சான்றுதான் இக்கற்கோட்டை. மசாடா வளாகத்தின் மையமாக வீறுகொண்டு நிமிர்ந்து நிற்கும் இக்கற்கோட்டை சுமார் 840 ஏக்கர் விசாலமுடையது. இவ்வாறு ஒரு வீர வரலாற்றின் சான்றாக நிமிர்ந்து நிற்கும் காரணத்தினாலேயே தமது பயிற்சிகளை முடித்துக்கொண்ட அனைத்துத் துறைகளையும் சார்ந்த இஸ்ரயேல் பாதுகாப்புப் படையினரும் தமது இறுதி வாக்குறுதியை எடுத்து நாட்டுக்குத் தம்மை அர்ப்பணிக்கும் புனித இடமாக இன்று மசாடா அமைந்துள்ளது.

கி.பி. 73ஆம் ஆண்டு சித்திரை மாதம் 15ஆம் திகதி உரோமையர்களால் கைப்பற்றி அழிக்கப்பட்ட மசாடாக் கற்கோட்டையுடன் முடிவடைந்ததாகக் கருதப்பட்ட எபிரேய இனத்தின் வரலாறு தனது இருப்பைத் தக்கவைத்து மீண்டும் உயிர்பெற்றுத் தளிர்த்தது. உலகெங்கும் உயிர்பிழைப்பதற்காகச் சிதறியோடிய எபிரேய இனம் ஏறத்தாள பதினெட்டு நீண்ட நூற்றாண்டுகளின் பின் 1947ஆம் ஆண்டு வைகாசி மாதம் 14ஆம் திகதி சாம்பல் மேட்டில் இருந்து புத்துயிர்ப்படைந்து ‘புதிய இஸ்ரயேல்’ என்ற பெயருடன் ஒரு தேசிய இனமாக மீண்டெழுந்து, ஒரு சுயநிர்ணய நாடாக உலக அங்கீகாரம் பெற்றது.

இன்றைய இஸ்ரயேல் மத்திய கிழக்கில் 22,145 சதுரக் கிலோமீற்றரை மட்டும் நிலப்பரப்பாகக் கொண்ட ஒரு சிறிய

நாடு. நிலப்பரப்பில் சிறிய நாடாக இருந்தாலும் தனது பாரம்பரியப் பரம எதிரிகளான இஸ்லாமிய நாடுகள் மத்தியில் வீராப்புடன் தலைநிமிர்ந்து நிற்கிறது. சூழ உள்ள எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாகத் தன்னை நிலைநிறுத்தி வைத்துள்ளது. அனைத்து உலகநாடுகள் மத்தியிலும் அதியுயர் தொழில் நுட்பத்தின் உச்சமான நாடாகத் தன்னை எண்பித்து அதனூடாக வினைத்திறனுடைய விவசாயம், மருத்துவம், இராணுவக் கட்டமைப்பு, விண்வெளி ஆய்வுகள் போன்றவற்றை விசாலப் படுத்தி ஒரு வல்லரசாகப் பரிணமித்துக் கொண்டிருக்கிறது. எபிரேய இனத்தின் வரலாற்றுக்கு இத்தகைய ஓர்மத்தைக் கொடுத்து அதனை மீண்டெளவைத்த திருப்பு முனைகளில் ஒன்றாக அமைந்தது கி.பி. 73ஆம் ஆண்டு சித்திரை மாதம் 15ஆம் திகதி மசாடாக் கற்கோட்டையில் அரங்கேறிய தற்கொடை நிகழ்வு என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு எபிரேய வரலாற்றில் தனித்துவ இடம் வகிக்கும் மசாடாக் கற்கோட்டையின் வரலாற்றையும், அங்கு நிகழ்ந்த தனித்துவமான நிகழ்வுகளையும் வரலாற்று முறையியலின் அடிப்படையில் நோக்கி அதன் மூலமாக மசாடா எவ்வாறு எபிரேய வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்தது என்பதை உய்த்துணர் முறையியலின் அடிப்படையில் முன்வைப்பதே இந்நூலின் இலக்காகும்.

மசாடாக் கற்கோட்டையின் தற்போதைய நிலையில் ஆரம்பித்து, ஒரு பின்நோக்கிய பார்வையாக (Retrospective) அதன் பாரம்பரிய வரலாற்றை நோக்கி இந்நூல் நகர்கிறது. மசாடாவில் அரங்கேறிய நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதற்கான ஒரு தயார்ப்படுத்தலாக மசாடா வரையான எபிரேய இனத்தின் சுருக்கமான வரலாறு கூறப்பட்டு, அதனோடு இணைந்த வகையில் மசாடா எவ்வாறு உரோமையருக்கெதிரான எபிரேயப் புரட்சிகளின் மையமாக மாறியது என்பது அலசப்படுகிறது. கி.பி. 73ஆம் ஆண்டு சித்திரை மாதம் 15ஆம் திகதி மசாடாவில் நடந்தேறிய வரலாற்றின் களங்கம் படிந்த நிகழ்வு விளக்கப்பட்டு, மசாடாவின் பின்னரான எபிரேய இனத்தின் நிலை, இருபதாம் நூற்றாண்டில் புதிய இஸ்ரயேலின் உருவாக்கம் ஆகியனவற்றை

ஓர் ஆய்வின் அடிப்படையில் இந்நூல் முன்வைக்கிறது. இதன் மூலம் கி.பி. 73ஆம் ஆண்டுடன் அழிந்து விட்டதாகக் கருதப்பட்ட எபிரேய இனத்தின் வரலாறு மீள் எழுச்சி பெற மசாடா ஒரு திருப்புமுனையாக அமைந்தது என்பது ஆய்வின் எடுகோளாக முன்வைக்கப்பட்டு நிறுவப்படுகிறது. மேலும் ஈழத்தில் இருந்து எழுதப்படும் நூல் என்பதால் ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் முடிவுப் புள்ளியாகக் கருதப்படும் முள்ளி வாய்க்கால், அக்கால எபிரேய மக்களின் போராட்டத்தின் முடிவுப் புள்ளியாகக் கருதப்பட்ட மசாடாவுடன் ஒப்பீடு செய்யப்படக்கூடிய சாத்தியக் கூறும் கருத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மசாடா எபிரேய வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்தது போல, முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழரின் வரலாற்றில் திருப்புமுனையாக அமையுமா என்பது வாசகர்களுக்கு ஒரு சவால் விடுக்கும் வினாவாக முன்வைக்கப்படுகிறது.

❂❂❂

ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் நியாயத்தினையும் அவசியத்தினையும் அரசியல் இறையியல் பின்புலத்தில் ஆய்வுசெய்து உலக அரங்குகளில் உரத்துச் சொன்ன பேராசிரியர் S.J. இம்மானுவேல் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார். ஒடுக்கப்படும் மக்கள் சார்பான இறையியலை உருவாக்குவதில் என்றும் சளைக்காது போராடிவரும் இவர் எனது இறையியல் பேராசிரியரும் ஆவார். 2009ஆம் ஆண்டு சர்வதேசக் கூட்டுச்சதியுடன் ஈழத்தமிழரின் உரிமைப்போராட்டம் பெரும் அவலங்களுடன் முள்ளி வாய்க்காலில் முடிவுக்கு வந்தது. அதன் பின்னணியில் மனிதத்தையும், மனித உரிமைகளையும் காத்திடப் போராடும் ஒரு முற்போக்குக் களப் போராளியாக “ஈழத்தமிழரின் முடிந்த முள்ளிவாய்க்காலும் தொடரும் போராட்டமும்” என்னும் தனது நூல் மூலம் போர் முடிவடைந்தாலும், முடிவடையாது தொடரும் ஈழத்தமிழரின் போராட்டத்திற்கான அடிப்படைக் காரணிகளின் நியாயத்தினை உலகிற்கு வெளிச்சமிட்டுக்காட்டியவர்.

மசாடா - முள்ளிவாய்க்கால் ஆகியவற்றின் ஓர் ஒப்பீடாக அமையும் இந்நூலுக்கு அவர் அணிந்துரை வழங்கியிருப்பது இந்நூலில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் 'பின் மசாடா - பின் முள்ளிவாய்க்கால்' சிந்தனைச் செல்நெறிகளுக்கு மேலதிக வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளது. அவருக்கு எனது நன்றிகள்.

✪✪✪

அக்கால எபிரேய மக்களின் போராட்டத்தின் முடிவுப் புள்ளியாகக் கருதப்பட்ட மசாடா பற்றி ஈழத்தில் இருந்து ஆய்வு செய்து எழுதப்படும் இந்நூல் ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் முடிவுப் புள்ளியாகக் கருதப்படும் முள்ளி வாய்க்கால் போரின் இறுதிநாளில் பலியாக்கப்பட்ட அமரர் அருட்திரு M. சரத்ஜீவன் அவர்களின் நினைவுகளுக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. அத்துடன ஏறத்தாள இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எதிரியின் கைகளில் அகப்படாது தம்மைத்தாமே தற்கொடையாக்கிய 960 எபிரேய வீர, வீராங்கனைகளும், 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில் எதிரியின் கைகளில் வீழாது தம்மைத்தாமே ஆகுதியாக்கிய ஈழத்தமிழ் வீர, வீராங்கனைகளும் இச் சமர்ப்பணத்தில் மரியாதையுடன் நினைவுகூரப்படுகிறார்கள்.

**பேராசிரியர் - அருட்திரு யோ.கி. போல் றொகான்**
தலைவர், கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

✪✪✪